## பாடம்- 21 கடைசி வாதையும் பஸ்காவும் (யாத் 10-12)

மக்கள் மீண்டும் மீண்டும் ஒரே காரியங்ளைச் செய்யும்போது ஒரே விதமான முடிவை திரும்ப திரும்ப பெற்றுக்கொள்வது ஆச்சரியமான விஷயமல்ல. வேறு விதமான முடிவு வேண்டுமானால் வேறு ஒரு முறையைக் கையாள வேண்டும்.

இந்தப் பாடத்தில் பார்வோன் ராஜா மோசேயையும், ஆரோனையும், இஸ்ரவேலரையும் எகிப்திலிருந்து அனுப்ப மறுத்து மீண்டும் மீண்டும் இருதயத்தைக் கடினப்படுத்தி ஒரே தவறை செய்ததை பற்றி கற்போம். தேவன் பார்வோனின் மனதை அறிந்தப்படியால் தொடர்ந்து அதிசயங்களைச் செய்தார். அதன் விளைவாக எகிப்தில் அதிக அழிவு ஏற்பட்டது.

மோசே பார்வோனிடம் போய், ‘‘உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? நீ இஸ்ரவேலரை போகவிடமாட்டேன் என்பாயாகில் நான் நாளைக்கு உன் எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவேன். தரை காணாதபடிக்கு அவைகள் பூமியின் முகத்தை மூடி, கல்மழைக்குத் தப்பி மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து வெளியிலே துளிர்க்கிற செடிகளையெல்லாம் தின்றுபோடும் என்று தேவன் கூறுகிறார்’’ என்றான்.

பார்வோனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி, ‘‘தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்ய அந்த மனிதர்களைப் போகவிடும். எகிப்து அழிந்து போனதை நீர் இன்னும் அறியவில்லையா?’’ என்று வேண்டினார்கள். எனவே பார்வோன் மோசேயிடம், ‘‘புருஷராகிய நீங்கள் மட்டும் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள’’ என்றான்.

அதற்கு மோசே, ‘‘அப்படியல்ல எங்கள் இளைஞரோடும், எங்கள் குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும், எங்கள் மாடுகளையும் நாங்கள் கூட்டிக் கொண்டு போவோம்’’ என்றான்.

பார்வோன் மிகவும் சினம் கொண்டு மோசேயையும், ஆரோனையும் தன் சமூகத்திலிருந்து துரத்திவிட்டான்.

உடனே மோசே, தன் கையை நீட்டினப் போது, கர்த்தர் அன்று பகல் முழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்மேல் வீசப்பண்ணினார். விடியற்காலத்திலே கீழ்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்தது. அவைகள் எகிப்து தேசம் எங்கும் பரவி, எகிப்தின் எல்லை எங்கும் மிகவும் ஏராளமாய் இறங்கிற்று.

நிலத்தின் பயிர்வகைகள் யாவையும், மரங்களின் கனிகள் யாவையும் அவைகள் பட்சித்துப் போட்டு பூமியின் முகம் முழுவதையும் மூடிற்று.

அப்பொழுது பார்வோன், மோசேயை தீவிரமாய் அழைத்து, ‘‘உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்தேன். உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவை மாத்திரம் என்னை விட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள்’’ என்றான். மோசே அவ்வாறு விண்ணப்பம் பண்ணியதும், கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை வீசும்படிச் செய்தார். அது வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டு போய் செங்கடலிலே போட்டது. எகிப்தின் எல்லையில் எங்கும் ஒரு வெட்டுகிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.

அவைகள் சென்றவுடன் பார்வோன் மீண்டும் கர்த்தருக்கும், இஸ்ரவேலருக்கும் விரோதமாக தன் இருதயத்தை கடினப்படுத்தினான்.

கர்த்தர் மோசேயை நோக்கி, ‘‘தடவிக் கொண்டிருக்கதக்கதாக இருள் எகிப்து தேசத்தின் மேல் உண்டாகும்படிக்கு உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு’’ என்றார். இது பார்வோனுக்கு மிகப்பெரிய அவமானம். ஏனெனில் பார்வோன் ராஜா எகிப்தியக் கடவுள்களில் முதன்மையான ‘இரா’ என்ற சூரியக் கடவுளின் புத்திரனாய் கருதப்பட்டான்.

எகிப்து தேசம் எங்கும் மூன்று நாள் காரிருள் உண்டாயிற்று. ஒருவரை ஒருவர் காணவும் இல்லை. ஒருவரும் தம்மிடத்தை விட்டு எழுந்திருக்கவும் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது. அப்பொழுது

பார்வோன், மோசேயை அழைப்பித்து, “நீங்கள் போய் கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும் மாத்திரம் நிறுத்தப்பட வேண்டும். உங்கள் குழந்தைகள் உங்களுடன் போகலாம்'' என்றான்.

மோசே முடியாது என்று தலையசைத்து, ‘‘நாங்கள் எல்லோரையும், எல்லாவற்றையும் எங்கள் மிருகஜீவன்களையும் கர்த்தருக்கு தகனபலிச் செலுத்த எடுத்துக் கொண்டுச் செல்வோம். ஒரு குளம்பும் பின்வைக்க மாட்டோம்'' என்றான்.

பார்வோன் மீண்டும் கலகம் செய்து தன் மனதை மாற்றிக் கொண்டு மோசேயை நோக்கி, ‘‘நான் உங்களைப் போகவிடமாட்டேன்! என்னை விட்டு அப்பாலே போ. நீ இனி என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு. நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாய்” என்றான்.

அப்பொழுது மோசே, ‘‘கர்த்தர் நடுராத்திரியிலே, நான் எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப் போவேன் என்கிறார். அப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் எந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்திலிருக்கும் முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும்.

அதினால் எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும். ஆனால் இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைத்து இருப்பதில்லை. அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறிவீர்கள்'' என்றான்.

பின்பு மோசே, இஸ்ரவேலரிடம் ‘‘கர்த்தர் மற்றொரு வாதையை அனுப்பப் போகிறார். அதற்கு பிறகு பார்வோன் நம்மை துரத்திவிடுவான்'' என்று கூறினான். கர்த்தர் மோசே மூலம் இஸ்ரவேலருக்கு ‘‘இப்பொழுது ஒவ்வொருவனும் அவனவன் அயலானிடத்திலும், ஒவ்வொருத்தியும் அவளவள் அயலாளிடத்திலும்

வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் கேட்கும்படி சொன்னார்.

இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள் பழுதற்ற ஒருவயதுள்ள ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். அதை இந்த மாதத்தின் பதினாலாம் தேதியில் சாயங்காலத்தில் அடிக்க வேண்டும்.

அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து தாங்கள் அதை புசிக்கும் வீட்டுவாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள்.

நீங்கள் உங்கள் அறைகளில் கச்சைக் கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சையை தொடுத்துக் கொண்டும், உங்கள் கையில் தடியை பிடித்துக் கொண்டும் அதை தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள். அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் உருவ கடந்து போய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருகஜீவன்கள் மட்டும் முதற்பேறாய் இருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி எகிப்து தேவர்களின் மேல் நீதியைச் செலுத்துவேன்.

நானே கர்த்தர், நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களைக் கடந்து போவேன். உங்கள் முதற்பேறானவைகளை கொலை செய்ய மாட்டேன்” என்று அறிவுறுத்தினார் (யாத் 12:1-13)

இஸ்ரவேலர்கள் தேவன் கட்டளையிட்டபடியே செய்தார்கள். தேவன் தமது உக்கிரமான கோபத்தையும், மூர்க்கத்தையும், சினத்தையும், உபத்திரவத்தையும், தீங்கு செய்யும் தூதர்களையும் எகிப்திற்குள்ளே அனுப்பினார் (சங் 78:49)

எகிப்திலே மகா கூக்குரல் உண்டாயிற்று. சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை. தேவன் இஸ்ரவேலின் வீடுகளின் நிலைக்காலில் இருந்த இரத்தத்தை கண்டவுடன் முதற்பேறாய் இருக்கிறவைகளை அதம் பண்ணாமல் கடந்து சென்றார்.

நடுராத்திரியிலே பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, “நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களை விட்டுப் புறப்பட்டுப் போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு போங்கள். என்னையும் ஆசீர்வதியுங்கள்” என்றான்.

தாங்கள் எல்லாரும் செத்து விடுவோம் என்று பயந்ததினால் எகிப்தியர் தீவிரமாக அந்த ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேலர்கள் கேட்ட அனைத்தையும் அவர்களுக்குக் கொடுத்தனர். பொன்னுடைமைகளையும், வெள்ளியுடைமைகளையும், வஸ்திரங்களையும் கொடுத்தார்கள். இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்.

6 லட்சத்திற்கும் மேலான ஏபிரேய ஆண்கள், தங்கள் மனைவிகளோடும், பிள்ளைகளோடும் மேலும் சில எகிப்தியர்களோடும் கோசேனிலிருந்து சுக்கோத்து வரைக்கும் நடந்து சென்றனர். அவர்கள் 32 கிலோ மீட்டர் (20 மைல்) நடந்தனர். அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையும் மற்ற மிருகஜீவன்களையும் ஓட்டிக் கொண்டு சென்றனர்.

மறுநாள் எகிப்திலிருந்து அவர்கள் கொண்டு வந்த பிசைந்த மாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள். அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளிக்காமல் இருந்தது. யோசேப்பின் காலத்திலிருந்து 430 வருடங்கள் இஸ்ரவேலர் எகிப்தில் வாழ்ந்தனர்.

அன்று முதல் இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய பஸ்காவை முதல் மாதத்தின் 14 ஆவது நாளில் நினைவுக் கூற வேண்டும். ஏனெனில் தேவன் அன்று இராத்திரியிலே தான் அவர்களுடைய நீண்ட கால அடிமைத்தனத்திலிருந்து வல்லமையாய் விடுவித்தார்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது ஏனெனில் கர்த்தருடைய எதிரிகளின் மேல் வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றியும், அவர் எவ்வாறு தம்மிடம் கூக்குரல் இடும் தம் பிள்ளைகளை அடிமைத்தனத்திலிருந்தும், அந்தகாரத்திலிருந்தும் விடுவிப்பார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இங்கே பார்வோன் முழுமையாக மனந்திரும்ப விரும்பாத ஓர் மனிதனுக்கு உதாரணமாக இருக்கிறான். அவன் பாவத்தினால் ஏற்பட்ட பின் விளைவுகளுக்காக வருத்தப்பட்டாலும், விசுவாசத்தை தேவன் மீது வைக்கவில்லை.

இந்தப் பாடத்தின் முக்கியக் கருத்து என்னவென்றால், தேவன் பாவிகளுடன் நீடிய பொறுமையுள்ளவராய் இருப்பாராயிலும் அவர்கள் மனம்திரும்பவில்லை என்றால், பின்விளைவுகளை இந்த வாழ்க்கையிலும், நித்தியத்திலும் சந்திக்க நேரிடும். மனித இனத்தின் கீழ்படியாமையும், கலகமும், அழிவையும் மரணத்தையும் மட்டுமே கொண்டு வரும்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

1. இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரிடம் என்ன கேட்டார்கள்? (6 நொடிகள் நிற்க)

‘‘அவர்கள், எகிப்தியரிடமிருந்து பயணத்திற்கு தேவையான வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள்’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. எந்த வாதையினால் பார்வோன் இராஜா இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே அனுப்பினார்? (6 நொடிகள் நிற்க)

‘‘தேவன் எகிப்து தேசம் எங்கும் கடந்துப் போய் எகிப்திலுள்ள எல்லா வீட்டின் முதற்பேராயிருக்கிறவைகளை அதம் பண்ணினார்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலைப் பெற்று வெளியேறியதைக் கொண்டாடும் யூதப் பண்டிகையின் பெயர் என்ன? (5 நொடிகள் நிற்க)

‘‘பஸ்கா’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள்.

நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை உங்கள் நண்பரிடம் கூறவும். பார்வோனை போல தன் பாவத்திற்கு வருத்தப்பட்டு, ஆனால் மனம் திரும்பாமல் இருக்கின்ற யாரையாவது தெரியுமா? என்றுக் கேளுங்கள். இந்த பாடத்தின் அடிப்படையில் அந்த மனிதன் மனம் திரும்ப என்ன செய்ய வேண்டும்? என்று கேளுங்கள்.

தங்கள் கிரியைகளின் பின்விளைவுகளை யோசித்து, மனம் திரும்பி தேவனிடம் மன்னிப்புப் பெற்று இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள்.

பாடம் முடிந்தது